# *1.* விசுவாசம்

## முன்னுரை:

**"விசுவாசம்"** என்கிற வார்த்தை கிறிஸ்தவ மார்க்கத்தில் அடிக்கடி பயன்படுத்தும் வார்த்தையாக இருக்கிறது. கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை குறித்து பேதுரு தன்னுடைய நிருபத்தில் எழுதும் போது, நம்முடைய விசுவாசம் **"அருமையானது"** என குறிப்பிடுகிறார் ( 2 பேதுரு 1:1). விசுவாசம் என்பது என்ன? என்கிற கேள்வி உங்களுடைய மனதில் எழும்பலாம். அதற்கான பதிலை எபிரெயர் 11:1 நமக்கு தருகிறது **"நம்பப்படுகிறவைகளின் உறுதியாகவும், காணப்படாதவைகளின் நிச்சயமாக"** விசுவாசம் இருக்கிறது, அதாவது நம்முடைய நம்பிக்கையின் உறுதியும், நிச்சயமுமே விசுவாசம் ஆகும்.

இந்த பாடத்திலிருந்து நம்முடைய விசுவாசத்தை குறித்து வேதம் என்ன கூறுகிறது என்பதை நாம் கற்றுக்கொள்ளப்போகிறோம். நம்முடைய விசுவாசம் எவ்வளவு உண்மையானது எனவும், நாம் ஏதோ கண்மூடித்தனமாக இயேசுவை பின்பற்றவில்லை எனவும், வேத வசனத்தினால் நாம் அறிந்துகொள்ளவே இந்த பாடம் நமக்கு கொடுக்கப்படுகிறது.

### I. தேவன் இருக்கிறார் என்பதே நம்முடைய விசுவாசமாயிருக்க வேண்டும்:

1. எபிரெயர் 11:6 - யிலிருந்து நாம் நம்முடைய விசுவாசத்திற்காக கற்றுக்கொள்ளும் பாடம் என்ன ?

2. எபிரெயர் 11:6- யிலிருந்து தேவனிடத்தில் சேருகிறவன் எந்த இரண்டு காரியங்களை விசுவாசிக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார்?

3. தேவன் இல்லை என்று சொல்கிறவன் யார் ? என வேதாகமம் நமக்கு கூறுகிறது (சங்கீதம் 14:1)

4. ஒருவர் தேவனே இல்லை என கூற காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் நினைக்கிறீர்கள்? (உங்கள் சொந்த கருத்தை எழுதவும்)

5. சங்கீதம் 10:4; சங்கீதம் 14:2; சங்கீதம் 36:1-3 யிலிருந்து, மனிதர்கள் தேவன் இல்லை என கூற காரணங்கள் என்னென்ன?
   I.
   II.
   III.
6. இயேசு ஒளியாக இருக்கிறார் (யோவான் 8:12); ஆனால் ஜனங்கள் அந்த ஒளியை ஏற்றுக்கொள்ளாததற்கு என்ன காரணம் என இயேசு யோவான் 3:19,20 -யில் கூறுகிறார்?

**II. "நான் இருக்கிறேன்" என்பதற்கு தேவன் ஆதாரங்களை கொடுத்திருக்கிறார்.**

அ. படைக்கப்பட்ட பொருள்கள்(இயற்கை) தேவன் இருக்கிறார் என நமக்கு கூறுகிறது.

1. அப்போஸ்தலர் 14:17 -யிலிருந்து தேவன் தன்னை குறித்து எப்படியெல்லாம் சாட்சி விளங்கப்பண்ணுகிறார் என பவுல் கூறுகிறார்?

2. தேவன் (படைப்பாளி) ஒருவர் இருக்கிறார் என படைப்புகள் (உண்டாக்கப்பட்டவைகள்) நமக்கு தெளிவாக கூறுகிறது (ரோமர் 1:19,20). நாம் என்ன செய்ய வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார்? (அப் 17:27; சங்கீதம் 14:2)

3. சூரியனையும், சந்திரனையும், நட்சந்திரங்களையும் பூமியின் இயக்கத்தையும் பார்க்கும் போது தேவனை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? (சங்கீதம் 19:1-3)

குறிப்பு: நாம் இந்த பூமியை பார்க்கும் போது, எவ்வளவு நேர்த்தியாய் வடிவமைக்கப்பட்டிருக்கிறது என பார்த்து சந்தோஷப்படுகிறோம், ஆச்சரியப்படுகிறோம். ஆனால் முதலில் **"இந்த பூமியானது ஒழுங்கின்மையாகவும், வெறுமையாக இருந்தது"** (ஆதி 1:2). தேவன் இந்த ஒழுங்கின்மையாயிருந்த

பூமியை ஒழுங்குப்படுத்தியிருக்கிறார் (ஆதி 1:25). எந்த பொருளும் தானாகவே ஒழுங்கில்லாத நிலையிலிருந்து ஒழுங்கான நிலைக்கு செல்லாது. ஒழுங்கில்லாததை ஒழுங்குப்படுத்த ஒருவர் தேவை, ஆகவே எல்லாம் தானாக வரவில்லை, தேவனே எல்லாவற்றையும் உண்டாக்கினார். (எபி 3:4; எபி 11:3)

ஆ. தேவன் இருக்கிறார் என்பதற்கு அவரால் கொடுக்கப்பட்ட வேதாகமம் ஆதாரமாயிருக்கிறது.

1. 1 தீமோத்தேயு 3:16,17 -யிலிருந்து வேதாகமம் யாரால் கொடுக்கப்பட்டது என நாம் கற்றுக்கொள்கிறோம்?

2. 1 தெசலோனிக்கேயர் 2:13 -யில் பவுல் தங்களால் தெசலோனிக்கேய சபையார் கேட்ட வசனங்கள் யாருடைய வசனமாக/வார்த்தையாக இருந்தது என பவுல் கூறுகிறார்?

3. வேதாகமம் மனிதர்களுடைய வார்த்தையினால், யோசனையினால், அறிவினால் வரவில்லை. மாறாக அது யாரால்? எப்படிக்கொடுக்கப்பட்டதாக வேதம் நமக்கு கூறுகிறது? (2 பேதுரு 1:20,21)

4. வேதாகமம் தேவனால் கொடுக்கப்பட்டது என்பதற்கான சில ஆதாரங்களை குறிப்பிடவும்:
   a. அறிவியல் ஆதாரங்கள்:
      i. ஏசாயா 40:22 -
      ii. அப்போஸ்தலர் 17:26 -
      iii. யோபு 36:27 -
      iv. 1 கொரிந்தியர் 15:41 -
      v. லேவியராகமம் 17:11 –

குறிப்பு: மனிதன் அறிவியலை கொண்டு உண்மைகளை கண்டுப்பிடிப்பதற்கு முன்பே, வேதாகமம் தேவனால் அந்த உண்மைகளை நமக்கு கூறியிருக்கிறப்படியால் வேதாகமம் தேவனால் வந்தது என்பதை நம்மால் நிருபிக்க முடியும்.

b. தீர்க்கதரிசன ஆதாரங்கள்: ( 2பேது 1:19-21)

i. இயேசுவை பற்றி அவர் பிறப்பதற்கு பல வருடங்களுக்கு முன்பே அவரை பற்றி சொல்லப்பட்டவைகள் அவருடைய காலத்தில் அப்படியே நடந்தது

ii. ஏசாயா 7:14 = மத்தேயு 1:22,23

iii. சகரியா 9:9 = மத்தேயு 21:4

iv. ஏசாயா 9:1,2= மத்தேயு 9:13,14

v. சகரியா 11:12,13 = மத்தேயு 27:3-10

குறிப்பு: இந்த தீர்க்க தரிசனங்களை கூறிய ஏசாயாவும், சகரியாவும் இயேசு பிறப்பதற்கு பல வருடங்களுக்கு முன்பே இயேசுவின் வாழ்க்கை பற்றியும், ஊழியத்தை பற்றியும் தீர்க்கதரிசனம் கூறிவிட்டார்கள். அந்த தீர்க்கதரிசனங்கள் எல்லாம் இயேசுவின் காலத்தில் அப்படியே நிறைவேறியது. அதை பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட நான்கு தேவமனிதர்கள் (மத்தேயு, மாற்கு, லூக்கா யோவான்) தங்களுடைய சுவிசேஷ புஸ்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த தீர்க்கதரிசனங்கள் வேதாகமம் தேவனால் வந்தது என்பதற்கு மிகப் பெரிய ஆதாரமாயிருக்கிறது.

c. இராஜாக்களை பற்றியும், இராஜ்யங்களை பற்றியும் கூறப்பட்ட தீர்க்கதரிசனங்கள்:

i. “கோரேஸ்” (ஏசா 44:28) என்கிற மனிதன் (ராஜா) பிறப்பதற்கு முன்பே (250 வருடம்) அவனை பற்றி ஏசாயா என்னும் தீர்க்கதரிசி, தீர்க்கதரிசனம் கூறினான். அவன் பேர் முதற்கொண்டு, அவனுடைய செயலை குறித்து தீர்க்கதரிசம் சொல்லப்பட்டது. அது அப்படியே வரலாற்றில் நடந்திருக்கிறது (2 நாளா 36:22)

ii. தானியேல் 2:28-44 -யில் இராஜ்யங்கள் பற்றி கூறப்பட்ட தீரக்கதரிசனம். அப்படியே வரலாற்றில் நடந்திருக்கிறது.

குறிப்பு: தேவன் காலங்களை கடந்து பார்க்க கூடியவர். இன்றையிலிருந்து அடுத்த 100 ஆண்டுக்குள் இந்தியாவில் என்ன நடக்கும் என்பதை துல்லியமாகவும், முழுமையாகவும் அறிந்தவர் தேவன் மட்டுமே, இது மனிதர்களால் முடியாது; ஏசாயாவும், தானியேலும் வெறும் கருவிகள் மட்டுமே, ஆனால் தேவன் இவர்களை கொண்டு கூறியிருந்த தீர்க்கதரிசனம் வரலாற்றில்

நடந்திருக்கிறது. இது வேதாகமம் மனிதனிடம் இருந்து வரவில்லை எனவும் வேதாகமம் தேவனால் கொடுக்கப்பட்டது எனவும் நமக்கு ஆதாரமுமாயிருக்கிறது. வேதாகமம் இருக்கிறது என்றால் அதில் கூறப்பட்ட ஒன்றான மெய்தேவனும் இருக்கிறார்.

**முடிவுரை:**

வேதாகமம் கொடுக்கப்பட்டதின் நோக்கத்தை பற்றி இயேசு கூறியிருக்கிறார் யோவான் 20:30,31 -யை பார்க்கவும். நாம் விசுவாசித்து நித்திய ஜீவனைப்பெறுவதே வேதாகமத்தின் நோக்கமாயிருக்கிறது. தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பது மாத்திரமில்லை அதற்கு கீழ்படிய வேண்டும் (யாக் 1:22-25). இவற்றை எல்லாம் பார்க்கும் போது; நாம் தேவனின் மீது கொண்டிக்கும் நம்முடைய விசுவாசம் உண்மையில் மிகவும் அருமையானது மற்றும் சரியானது என்பதை நாம் புரிந்துக்கொள்கிறோம்.

# 2.இயேசு கிறிஸ்து

**முன்னுரை:**

இயேசு கிறிஸ்து தன்னுடைய ஊழியத்தின் போது தன்னுடைய சீஷர்களை பார்த்து **“நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்”** என்று கேட்டார். (மத் 16:15). யோவான் 17:3 -யில் **“ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்”** என இயேசு கூறியிருக்கிறார். ஒருவர் இயேசுவை அறிந்துக்கொண்டு அவருடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் போது நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த பாடம் நாம் இயேசுவை பற்றியும், அவர் இந்த பூமிக்கு வந்த நோக்கத்தையும் அறிந்துக்கொள்ள கொடுக்கப்பட்டிருப்பதோடு, கிறிஸ்தவர்களாய் இருக்கிற நாம் இயேசுவை அறிகிற அறிவில் வளர வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டிருக்கிறது. (1 பேது 3:18)

**I. தேவனுடைய குமாரன் இயேசு கிறிஸ்து (மாற்கு 1:1; ரோமர் 1:5)**

1. இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கரையேறினவுடனே வானத்திலிருந்து உண்டான சத்தம் என்ன கூறியது? (மத் 3:14-17)

2. இயேசுவும், பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானும் மலையின் மேல் இருக்கும் போது இயேசுவை பற்றி மேகத்திலிருந்து வந்த சத்தம் கூறினது என்ன? இயேசு இந்த கனத்தை யாரிடம் இருந்து பெற்றார்? (மத் 17:1-6; 2 பேது 1:16-18)

3. பிசாசுகள் பிடித்த மனிதன் இயேசுவை பற்றி கொடுத்த சாட்சி என்ன? (லூக் 8:28)

4. ஒருவர் இயேசுவை தேவனுடைய குமாரன் என விசுவாசிப்பதினால் அவர் பெற்றுக்கொள்ளும் நன்மை என்ன? (யோவான் 3:16,36)

5. இயேசு கிறிஸ்து எதன் நிமித்தமாக தேவனுடைய குமாரனாய் இருக்கிறார்? (ரோமர் 1:5)

**II. கிறிஸ்துவே நம்முடைய இரட்சிப்பின் அதிபதி (எபிரெயர் 2:10)**

1. இயேசு இந்த பூமிக்கு வந்ததின் நோக்கம் என்ன? (லூக் 19:10)

குறிப்பு: இரட்சிப்பு என்பது காப்பாற்றுதல், மீட்பு, பாதுகாத்தல் போன்ற அர்த்தமுடையது. பாவம் என்கிற மிக மோசமான ஒரு அடிமைத்தனத்திலிருந்து இயேசு மட்டுமே நமக்கு இரட்சிப்பை தர முடியும், அவரே நம்முடைய இரட்சிப்பின் அதிபதி (அப் 4:12)

2. யோவான் 8:34-யில் இயேசு நமக்கு கற்று கொடுத்திருக்கும் பாடம் என்ன?

குறிப்பு: பாவம் என்பது என்ன? என்கிற கேள்வி உங்களுடைய மனதில் எழும்பலாம் அதற்கான பதிலை வேதம் நமக்கு கொடுக்கிறது. **"அநீதியெல்லாம் பாவம்" – 1 யோவான் 5:17; "தேவனுடைய வார்த்தை மீறுவது பாவம்" – 1 யோவான் 3:4.** ஒருவர் நன்மை, தீமை என்கிற அறிவை அடைந்து தேவனுடைய வார்த்தையை மீறி நடக்கும் போது அவர் பாவம் செய்கிறார், அவரை பாவம் ஆளுகை செய்கிறது. (யோவான் 8:34)

3. பாவத்தின் விளைவு என்ன? (ரோம 6:23; யாக் 1:14,15)

4. எபேசியர் 2:2,3 -யிலிருந்து எந்த மூன்று காரியங்களினால் நடக்கிறவர்களாய் (வாழ்ந்து கொண்டுயிருக்கிறவர்கள்) தேவனுக்கு முன்பாக கோபாக்கினையின் (தண்டனைக்குரிய) பிள்ளைகளாயிருக்கிறார்?
   I.
   II.
   III.

5. நம்முடைய பாவங்களை கழுவும் அதிகாரம் யாரிடம் இருக்கிறது? (1 யோவா 2:2)

6. நம்முடைய அக்கிரமங்களையும், பாவங்களையும் மன்னிக்க இயேசு என்ன செய்தார்? (தீத்து 2:14)

7. இயேசு மரித்து எத்தனை நாட்களுக்கு பின் உயிர்த்தெழுந்தார்? (அப் 10:39,40)

8. இயேசு கிறிஸ்து இப்பொழுது எங்கே இருக்கிறார்? (எபே 1:20,21)

## III. இயேசு கிறிஸ்து நியாயாதிபதியாக இருக்கின்றார் (அப் 10:42)

குறிப்பு: இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, உயிர்தெழுந்து இப்பொழுது பிதாவின் வலதுபாரிசத்தில் இருக்கிறார் என நாம் வேத வசனங்களிலிருந்து கற்றுக்கொள்கிறோம். ஆனால் இயேசு மீண்டும் இந்த பூமிக்கு வருவார், நியாயந்தீர்க்கவும், நம்மை பரலோகத்திற்கு கொண்டு செல்லவும்.

1. நியாயத்தீர்ப்புச் செய்கிற அதிகாரம் யாரிடம் இருக்கிறது? (யோவா 5:22)

2. நியாயத்தீரப்பு என்பது என்ன? (2 கொரி 5:10; வெளி 22:12)

3. யோவான் 12:48-யிலிருந்து நியாயத்தீர்ப்பில் நம்மை நியாயத்தீர்ப்பது எது என நாம் கற்றுக்கொள்கிறோம்?

குறிப்பு: நியாயத்தீர்ப்பில் நாம் சரிரத்தில் வாழ்ந்த போது, நாம் செய்த கிரியைகள் அதாவது நன்மை, தீமை ஆகிய காரியங்களுக்கு பலன் கொடுக்க இயேசு வருகிறார். ஆனால் ஒரு நியாயதிபதி நியாயந்தீர்க்க வேண்டுமானால் அவர் சுயமாய் நியாயத்தீர்க்க முடியாது. ஒருவர் செய்தது தவறு, சரி என கூற சட்டம் வேண்டும். அந்த சட்டம் தான் இயேசுவால் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாடு. நம்மை இயேசு அவருடைய புதிய ஏற்பாட்டு சட்டத்தின் படி நியாயந்தீர்ப்பார், ஆகவே புதிய ஏற்பாட்டின் படியே நாம் வாழ வேண்டும்.

4. யாரெல்லாம் நியாயத்தீர்ப்பில் ஆக்கினை (தண்டனை) பெற்றுக்கொள்வார்கள்? ( 2 தெச 1:7)

5. தேவனால் வரும் ஆக்கினைக்கு (தண்டனை) தப்பித்து, பரலோகம் செல்ல நான் என்ன செய்யவேண்டும்? (யோவா 3:36; மாற் 16:15,16).

**முடிவுரை:**

தேவன் நம்மீது கொண்ட அன்பின் காரணத்தினால் நம்மை காப்பாற்றவும், ஆசிர்வதிக்கவும் தன்னுடைய குமாரனை நமக்காக கொடுத்திருக்கிறார். இயேசுவும் நம்மை நேசித்தபடியால் தன்னைதானே நமக்காக கொடுத்திருக்கிறார். இப்பொழுது நீங்கள் இயேசுவை நேசிக்கிறீர்களா? இயேசுவுக்காக நீங்கள் என்ன செய்ய யோசிக்கிறீர்கள், அவருடைய வார்த்தைக்கு கீழ்படிவீர்களா?

# 3.இரட்சிப்பு

**முன்னுரை:**

கடந்த பாடத்தில் இயேசு நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாக இருக்கிறார் எனவும், அந்த இரட்சிப்பை நாம் அடைய இயேசு என்ன செய்தார்? என நாம் வேதாகமத்திலிருந்து கற்றுக்கொண்டோம்.

இந்த பாடத்தில் நாம் ஏன் இரட்சிக்கப்பட வேண்டும்? எனவும், இரடசிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்? எனவும் வேதாகமத்திலிருந்து கற்றுக்கொள்ள போகிறோம், ஒருவர் தன்னை இயேசு பின்பற்றுபவராக நம்பி, அவர் இரட்சிக்கப்படாமல் மரித்துபோனால் அவரால் பரலோகம் செல்ல முடியாது.

ஆகவே இரட்சிப்பை குறித்து நம்முடைய எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் ஒதுக்கி வைத்துக்கொண்டு, தேவன் இரட்சிப்பை குறித்து என்ன? கூறுகிறார் என, அவரால் கொடுக்கப்பட்ட வேதாகமத்திலிருந்து கற்றுக்கொள்வோம்.

**I. நான் ஏன் இரட்சிக்கப்பட வேண்டும்?**

**அ. பாவம் மிகவும் ஆபத்தானது:**

1. இயேசு இழந்துபோனதை தேடவும், இரட்சிக்கவும் வந்தார் என நாம் லூக்கா 19:10-யில் நாம் படிக்கிறோம். இயேசு எதை/யாரை இழந்து போனார்?(எபி 2:10; 1 பேது 2:25)

2. பாவம் நம்மையும் தேவனையும் என்ன செய்கிறது? ( ஏசா 59:1,2)

3. பாவம் என்பது என்ன? ( 1யோவா 3:4; 1 யோவா 5:17)

4. ஒரு மனிதன் தேவனுடைய வார்த்தையை மீறி பாவம் செய்வதற்கு எது காரணமாயிருக்கிறது? (யாக் 1:13-15)

5. ஏவாள் தேவனுடைய வார்த்தையை மீறி தேவன் புசிக்க வேண்டாம் என கூறிய கனியை புசித்து பாவம் செய்வதற்கு அவளை தூண்டியது என்ன? (ஆதி 3:1-6)

6. ஆதாமும், ஏவாளும் பாவம் செய்ததற்கு பின்பு; தேவனால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தண்டனைகள் என்னென்ன?
   I. ஆதி 3:16 –
   II. ஆதி 3:17 –
   III. ஆதி 3:19 –
   IV. ஆதி 3:24 –

7. பாவத்தினால் இந்த உலகத்திற்குள் வந்தது என்ன? எல்லாரும் மரிப்பதற்கு காரணம் என்ன?(ரோம 5:12; ரோம 3:23)

8. ஒருவர் “நான் பாவமே செய்ததில்லை என கூற முடியுமா? (ரோம 3:23; 1 யோவா 1:8). நன்மை, தீமை அறியும் அறிவை அடைந்த பின் எல்லா மனிதர்களும் பாவம் செய்கிறார்களா?

9. பாவத்தின் சம்பளம் என்ன? (ரோம 6:23)

குறிப்பு: பாவம் என்கிறது எவ்வளவு மோசமானது என்பதை நாம் புரிந்துக்கொள்ள, தேவன் பாவத்தை எப்படி பார்க்கிறார் என்பதையும், தேவன் பாவத்தை எப்படி உணர்கிறார் என்பதையும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டும் (எசா 1:4-6; எரே 30:12-15; சங் 38:3-50

10. எசேக்கியேல் 18:4-யின் படி பாவஞ்செய்கிறவர்களின் ஆத்துமா என்ன ஆகிறது?

குறிப்பு: மரணம் என்பது “பிரிவு” ஆகும். அதாவது நம்முடைய சரீரத்தை விட்டு ஆத்துமா பிரிவதை நாம் மரணம் என்கிறோம், அதைப்போலவே தேவனால் கொடுக்கப்பட்ட ஆத்துமா தேவனை விட்டு பிரிந்தால் அதுவும் மரணமாகவே தேவன் பார்க்கிறார். (எபே 2:1; கொலோ 2:13). இந்த உலகத்தில் தவறு செய்தவர்களுக்கு கொடுக்கப்படும் உச்சகட்ட தண்டனை மரணமாகும், அதைப்போலவே பாவம் நமக்கு மிகப்பெரிய தண்டணையான மரணத்தை பெற்று தருகிறது. (வெளி 20:14)

**ஆ. நான் ஏன் இரட்சிக்கபட வேண்டுமென்றால், என்னை காப்பாற்ற இயேசு மரித்திருக்கிறார். (யோவான் 3:16,17)**

1. இயேசுவை தேவன் உலகத்திற்கு அனுப்பின காரணம் என்ன? (யோவா 3:16,17)

2. எபிரெயர் 2:14,15-யில் இயேசு நம்மைப்போல மாம்சத்தையும், இரத்ததையும் உடையவராய் மாறி, இந்த பூமிக்கு வந்த நோக்கம் என்னவென்று நாம் படிக்கிறோம் ?

3. இயேசு சிலுவையில் மரித்த போது, எந்த பிரமாணத்தை முடித்து(ஒழிந்து) எந்த பிரமாணத்தை கிறிஸ்தவர்களுக்கு கொடுத்தார்? (எபே 2:13-15) ஏன் ? (கொலோ 2:14,15; 2 கொரி 3:6)

குறிப்பு: பாவமானது நம்மையும் தேவனையும் பிரித்தது என நாம் பார்த்தோம், இதுவே ஆவிக்குரிய மரணமாக இருந்தது. நாம் இந்த பூமியில் உயிரோடு இருந்தாலும், நம்முடைய ஆத்துமா தேவனைவிட்டு பிரிந்து மரித்திருந்தது (எபே 2:1), ஆனால் இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தினால் நாம் தேவனோடு மறுபடியும் ஐக்கியமாக்கப்பட்டோம் (2 கொரி 5:19)

4. தேவன் யாரைக்கொண்டு நம்மை அவரோடு ஒப்புரவாக்கிக்கொண்டார் என வசனங்களில் பார்க்கிறோம்? (2 கொரி 5:18-19)

5. இயேசு நம்மை தேவனோடு ஒப்புரவாக்க சிலுவையில் என்ன செய்தார்? (கொலோ 1:20; ரோம 5:10; 1 பேது 3:18)

6. இயேசுவின் வார்த்தைக்கு கீழ்படிந்து. ஞானஸ்நானம் பெறுவதால் நமக்கும் தேவனுக்கும் ஏற்படும் விசேஷித்த உறவு என்ன? (கலா 3:26,27)

7. இப்பொழுது நீங்கள் சொல்லுங்க, ஒருவர் ஏன் இரட்சிக்கபட வேண்டும் என தேவன் விரும்புகிறார்? (1 தீமோ 2:4)

## II. இரட்சிக்கப்பட ஒருவர் என்ன செய்ய வேண்டும்? (அப் 10:30-34).

குறிப்பு: அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய ஊழியத்தில் இருக்கும் போது, அவரை பார்த்து சிறை அதிகாரி கேட்ட கேள்விதான் "இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும்" என்பது. அதற்கு பவுல் கூறினவற்றிலிருந்து ஒருவர் இரட்சிக்கப்பட, என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் கற்றுகொள்ளலாம்.

1. பவுல் எந்த சூழ்நிலையில் இருந்த போது பவுலை பார்த்து இந்த கேள்வி கேட்கப்பட்டது? (அப் 16:22-30)

2. பவுலை பார்த்து "நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என கேட்டது யார்? (அப் 16:27-30)

3. இரட்சிக்கப்பட பவுல் அவனுக்கும், அவனுடைய வீட்டாருக்கும் சொன்ன கட்டளை என்ன? (அப் 16:31)

4. ஏன் பவுல் அவர்களுக்கு கர்த்தருடைய வசனத்தை அன்று இராத்திரியே போதித்தான் என நீங்கள் நினைக்கிறிர்கள்? விசுவாசமானது எப்பொழுது வரும்? (ரோம 10:17)

5. மேலும் பவுல் அன்று இராத்திரியிலே அவர்கள் இரட்சிக்கப்பட என்ன செய்தான்? அவர்கள் இரட்சிக்கப்பட எதை பெற்றார்கள்? (அப் 16:13)

6. ஞானஸ்நானம் பெறுவதற்கு ஒருவர் செய்யவேண்டிய இரண்டு காரியங்கள் என்னென்ன? (அப் 2:38; அப் 8:37)

7. ஞானஸ்நானம் எதற்காக என பேதுரு கூறுகிறார்? (அப் 2:38)

8. மாற்கு 16:15,16 -யிலிருந்து இரட்சிக்கப்பட ஒருவர் என்ன செய்ய வேண்டும் என இயேசு போதித்தார்? அதை பவுல் சிறை காவல் அதிகாரியிடம் செய்தாரா?

9. சிறைகாவல் அதிகாரி ஞானஸ்நானம் பெற்ற பின்பு என்ன செய்தான்? (அப் 17:34), ஒருவர் ஞானஸ்நானத்தின் பின் என்ன செய்யவேண்டும் (வெளி 2:10; அப் 2:42)

10. ஞானஸ்நானத்தில் ஒருவர் தண்ணீரில் என்ன செய்யப்பட வேண்டும்? (அப் 8: 39,40; எபே 5:26; ரோம 6:3-6)

11. ஞானஸ்நானம் எடுப்பதினால் ஒருவர் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் என்னென்ன?

I. அப்போஸ்தலர் 2:38

II. 1 பேதுரு 3:21

III. கலாத்தியர் 3:27

IV. அப்போஸ்தலர் 8:38-39

V. அப்போஸ்தலர் 2:47

12. ஒருவர் இயேசுவை விசுவாசித்து, அவருடைய வார்த்தையின் படி ஞானஸ்நானம் எடுக்காவிட்டால், அவர் பரலோகம் செல்லமுடியுமா? (யோவா 3:3-5)

13. நீங்கள் கிறிஸ்துவின் சபையில் ஞானஸ்நானம் பெற்றீர்களா?

**முடிவுரை:**

தேவன் நம்முடைய இரட்சிப்பிற்காக திட்டத்தை ஏற்ப்படுத்தி, அதை தன்னுடைய குமாரன் மூலமாய் நிறைவேற்றி, நாம் தேவனுடைய பிள்ளைகளாய் மாறா ஒரு வாய்ப்பை நமக்கு கொடுத்திருக்கிறார், ஒருவேளை நீங்கள் கிறிஸ்துவின் சபையில் ஞானஸ்நானம் எடுக்காதவராய் இருப்பீர்களானால் உடனே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். இயேசு நியாயந்தீர்க்க வரும் போது அவருடைய வார்த்தைக்கு உங்களால் பதில் கூற முடியுமா?

# 4. சபை

**முன்னுரை:**

இரட்சிப்பை குறித்து கடந்த பாடத்தில் நாம் வேதாகமத்திலிருந்து கற்றுக்கொண்டோம், இரட்சிப்பில் நம்முடைய விருப்பத்தையும், உணர்ச்சிகளையும் ஒதுக்கி வைத்துக்கொண்டு, தேவனுடைய சித்ததை நிறைவேற்ற வேண்டும் என பார்த்தோம் அல்லவா?

அதைப்போலவே இரட்சிக்கப்பட்டவர்களை தேவன் சபையில் சேர்க்கிறார் என அப்போஸ்தலர் 2:47 -யில் படிக்கிறோம், இந்த பாடத்தில் சபை என்பது என்ன? இரட்சிக்கப்பட்ட ஒருவர் சபையில் இருந்து என்ன செய்ய வேண்டும்? சபை முக்கியமா? உண்மையான சபை என்ன என்பதை கற்றுக்கொள்ள போகிறோம்.

**I. சபை என்பது இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம் (அப் 2:47)**

1. இரட்சிக்கப்பட்டவர்களை தேவன் எங்கே சேர்த்தார் என வேதாகமத்தில் பார்க்கிறோம்? (அப் 2:47)

2. சபை குறித்து இயேசு கொடுத்த வாக்குத்தத்தம் என்ன? (மத் 16:16-19)

3. சபை கட்டினது யார்? அதற்காக அவர் என்ன செய்தார்? (மத் 16:18; எபே 5:27; அப் 20:28)

4. சபைக்கு தலையாக இருப்பது யார்? (எபே 1:23; கொலோ 1:18)

5. சபையில் இருக்கிறவர்களுக்கு என்ன பெயரை தேவன் கொடுத்தார்? (அப் 11:26)

குறிப்பு: சபை என்பது ஏதோ ஒரே இரவில் ஸ்தாபிக்கப்பட்ட ஜெபவீடு, ஆலயமோ அல்லது கட்டிடமோ இல்லை. இந்த சபையை குறித்து தேவன் பெரிய திட்டத்தை உடையவராகவும், அதை தீர்க்கதரிசிகளின் மூலமாக வெளிப்படுத்தி, புதிய ஏற்பாட்டின் காலத்தில் இயேசுவின் இரத்தத்தை கொண்டு சபையை கட்டினார்.

6. சபை குறித்து, சபை எங்கே, எப்பொழுது ஸ்தாபிக்கப்படும் என்பதை குறித்து தரிசனம் என்ன? (ஏசா 2:2,3)

7. தானியேல் சபை என்கிற இராஜ்யத்தை பற்றி கூறிய தீர்க்கதரிசனம் என்ன? (தானி 2:44)

8. சகரியா சபையை யார் கட்டுவதாக தீர்க்கதரிசனம் கூறினார்? (சகா 6:12,13)

**II. சபையின் ஆரம்பம்: (அப்போஸ்தலர் 2 அதிகாரம்)**

1. ஏசாயா கூறினது போலவே சபையானது கடைசி நாட்களில், எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டதா? (அப் 2:5 = சங் 125:1,2: அப் 2:16,17)

2. எந்த நாளின் போது அப்போஸ்தலர்கள் எருசலேமில் கூடியிருந்ததாக அப்போஸ்தலர் 2:1-யில் வாசிக்கிறோம்?

3. பெந்தேகொஸ்தே என்பது சபை என வேதம் நமக்கு கூறுகிறதா? அல்லது அது ஒரு நாள், பண்டிகை என வேதம் நமக்கு கூறுகிறதா? (அப் 2:1; 1 கொரி 16:8)

4. அப்போஸ்தலர் 2:4-யின் படி பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றவர்கள் யார்? அப்பொழுது அவர்கள் என்ன செய்தனர்?

5. அப்போஸ்தலர்கள் பேசின வெவ்வேறு பாஷைகளை (அந்நிய பாஷைகளை) அன்று எருசலேமில் இருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்களால் புரிந்துக்கொண்டு அதற்கு பதில் கூற முடிந்ததா? (அப் 2:5-11)

6. பேதுரு அப்போஸ்தலர் 2- ஆம் அதிகாரத்தில் யாரை பற்றி பிரசங்கித்தான்? (அப் 2:37-41)

7. எத்தனை நபர்கள் பேதுருவின் பிரசங்கத்தை கேட்டவர்களில் முதன்முதலில் பாவமன்னிப்புக்காக மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர்? (அப் 2:37-41)

குறிப்பு: இந்த இடத்திலேயே சபையானது இயேசுவால் அப்போஸ்தலர்களை கொண்டு கட்டடப்பட்டது, மத் 16:18,19 -யில் பேதுருவுக்கு வாக்குத்தத்தம் இயேசுவால் செய்யப்பட்டது போலவே முதன்முதலில் சுவிசேஷத்தை பேதுரு பிரசங்கம் செய்து, சபையின் அங்கத்தினார்களாக 3000 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

8. சபையின் ஆரம்பத்தில் சபையார் உறுதியாய் தரித்திருந்த நான்கு காரியங்கள் பட்டியலிடவும்? (அப் 2:42)
   i.
   ii.
   iii.
   iv.

9. ஆதி சபையார் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்ததாக அப் 2:42-யில் நாம் வாசிக்கிறோம். அப்போஸ்தலர் சுயமாய் பேசினார்களா? (அ) இயேசு அவர்களுக்கு கொடுத்த உபதேசத்தை பேசினார்களா?(கலா 1:11; மத் 28:19,20)

10. இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்கும் போது நியாயப்பிரமாணத்தை அதாவது பழைய ஏற்பாட்டை என்ன செய்ததாக எபே 2:15-யில் நாம் படிக்கிறோம்?

11. பழைய ஏற்பாடு யாருக்காக கொடுக்கப்பட்டது? அது கிறிஸ்தவர்களுக்காக கொடுக்கப்பட்டதா? (ரோம 9:4; உபா 4:8)

12. நியாயப்பிரமாணமாகிய பழைய ஏற்பாடு எதுவரைக்கு மட்டுமே இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டது? (கலா 3:19,24,25)

13. நியாயப்பிரமாணத்தின் படி இன்று நடந்துக்கொண்டு இருப்பவர்கள் யாரை விட்டு விலகியிருக்கிறார்கள்? (கலா 5:4)

குறிப்பு: நியாயப்பிரமாணத்தை இயேசு ஒழித்து நமக்கு ஒரு புதிய பிரமாணத்தை கொடுத்திருக்கிறார். இனி சபையில் யூதரும், புறஜாதியாரும் இருவருமே கைகொள்ள உபதேசத்தை இயேசு கொடுத்திருக்கிறார். அந்த உபதேசத்தை அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு (எபே 3:4-6), நமக்கு (சபைக்கு) நிருபங்களாய் எழுதியிருக்கிறார்கள். இனியும் ஒருவர் பழைய ஏற்பாட்டை கைகொள்ள வேண்டியதில்லை (கலா 5:1; யாக் 2:12; ரோம 8:1,2)

14. ஆதி சபையார் அப்பம் பிட்க எப்பொழுது கூடினார்கள் (அப் 20:7)

### III. மனிதர்களால் உருவாக்கப்பட்ட சபைகள்; சபைகள் இல்லை

1. இயேசு எத்தனை சபைகளை ஸ்தாபித்தார்? (மத் 16:18; அப் 2:47)

2. புதிய ஏற்பாட்டில் இருந்த சபைகள் யாருடைய உபதேசத்தில், எத்தனை உபதேசத்தில் நிலைத்திருந்தார்கள்? (1 கொரி 1:10; 2 யோவா 9,10)

3. 2 யோவான் 9,10 -யில் நமக்கான எச்சரிப்பு என்ன?

4. யுதா 4-யில் பக்தியற்றவர்கள் எங்கேயிருந்து வருகிறார்கள் என வசனம் நமக்கு கூறுகிறது?

5. இயேசுவால் உருவாக்கப்படாத சபைகளுக்கு என்னவாகும்? (மத் 15:13; 2 பேது 2:2,3)

**முடிவுரை:**

மனிதனுடைய பாரம்பரியங்கள், சடங்காசாரங்கள் மற்றும் உபதேசங்களை உடைய சபைகள் இயேசுவால் உருவாக்கப்பட்டது இல்லை, இவைகள் மனிதனால் உருவாக்கப்பட்டவைகள். கிறிஸ்து எந்த சபைக்கு தலையாக இருக்கிறரோ அந்த சபை கிறிஸ்துவின் சரிரமாக இருக்கிறது, இதுவே இயேசுவால் உருவாக்கப்பட்ட கிறிஸ்துவின் சபையாக இருக்கிறது (ரோம 16:16). இந்த சபையே தேவனுடைய வீடாக, சத்தியத்திற்கு தூணாகவும், ஆதாரமாக இருக்கிறது (1 தீமோ 3:15), நாம் தேவனுடைய பிள்ளைகளாக அவருடைய வீட்டில் இருக்க வேண்டும் என்றால் நாம் அவருடைய சபையில் கர்த்தரால் சேர்க்கப்பட வேண்டும். நீங்கள் இந்த சபையில் இருக்கிறீர்களா?

# 5. கிறிஸ்தவ வாழ்க்கை

**முன்னுரை:**

தேவன் நம்மீது வைத்திருக்கும் அன்பானது பெரிது, நமக்காக தேவன் தன்னுடைய ஒரே குமாரனை கொடுத்திருக்கிறார். இன்று நாம் தேவனுடைய பிள்ளைகளாய் மாற இயேசு செய்த தியாகம் உண்மையிலே பெரியது (1 யோவா4:9; எபே 5:2). இப்பொழுது நாம் என்ன செய்ய போகிறோம்? நாம் நம்மை பார்த்து கேட்பதே சரியாக இருக்கும்.

இந்த பாடமானது, நாம் நம்முடைய வாழ்க்கையில் தேவனை பிரியப்படுத்த வேண்டும் என்பதை நாம் புரிந்துக் கொள்ளும் நோக்கத்தோடு கொடுக்கப்படுகிறது. நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை மகிழ்ச்சியாக வாழ அர்த்தமுள்ளதாக வாழ நாம் தேவனை பிரியப்படுத்த வேண்டும்.

**I. நாம் இயேசுவைப் போல மாற வேண்டும் (கொலோ 3:10)**

1. ஞானஸ்நானம் பெற்றவர்கள் யாரை தரித்துக்கொண்டார்கள்? (அணிந்துக்கொண்டார்கள்)(கலா 3:27)

2. நம்முடைய சிந்தைகள் யாருடைய சிந்தையாக இருக்க வேண்டும்? அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

3. நம்முடைய சிந்தைகள் இயேசுவின் சிந்தைகளைப்போல மாற வேண்டுமென்றால்; இயேசுவின் சிந்தை எப்படிப்பட்டதாக இருந்தது? (பிலி 2:6-8; எபி 10:7)

4. இந்த பூமியில் இயேசு வாழும் போது யாரை மட்டுமே பிரியப்படுத்துகிறவராக இருந்தார்? (யோவா 8:29)

5. அப்போஸ்தலர்கள் யாரைப் பிரியப்படுத்துகிறவர்களாயிருந்தனர்? (1 தெச 2:4)

6. கிறிஸ்தவனில்லாத ஒருவருடைய வாழ்க்கைக்கும்? ஒரு கிறிஸ்தவரின் வாழ்க்கைக்கும் உள்ள மிகப் பெரிய வித்தியாசம் என்ன? கிறிஸ்தவனில்லாதவர் யாரை/எதை பிரியப்படுத்த விரும்புவார்? ( 1தெச 4:1)

7. சங்கீதம் 143:10 -யிலிருந்து நாம் எதை கற்றுக்கொள்ள வேண்டும்?

**II. நாம் தேவனை தொழுதுக்கொள்ள வேண்டும் என தேவன் விரும்புகிறார் (யோவா 4:24)**

1. யோவான் 4:23,24 -யின் படி தேவனை தொழுதுக்கொள்ள வேண்டும் என தேவன் விரும்புகிறார் என நாம் கற்றுக்கொள்கிறோம், ஆனால் எப்படி தொழுதுக்கொள்ள வேண்டும் என தேவன் விரும்புகிறார்?

2. நாம் யாருக்கு பிரியமாய் ஆராதனை செய்ய வேண்டும்? (எபி 12:28)

3. நாம் ஆவியின் படி ஆராதனை செய்ய வேண்டும் (யோவா 4:24), நம்முடைய ஆராதனையில் மாம்சத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமா? ஆவிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமா?

4. ஆவிக்குரிய ஆராதனை என்பது என்ன? (யோவா 6:63; ரோம 8:2)

5. ஆதி கிறிஸ்தவர்கள் ஆராதனை செய்யும் படி எந்த நாளில் கூடிவந்தார்கள்? (அப் 20:7; 1 கொரி 16:1,2)

6. ஆதி கிறிஸ்தவர்கள் கூடி வந்த நாளின் விசேஷம் என்ன? (மத் 28:1-6)

7. புதிய ஏற்பாடு ஆராதனையில் காண்பிக்கும் பாகங்கள் என்னென்ன?
   i. எபேசியர் 5:19 –
   ii. 1 தெசலோனிகேயர் 5:17-
   iii. அப்போஸ்தலர் 20:7 –
   iv. அப்போஸ்தலர் 20:7 –
   v. 1 கொரிந்தியர் 16:1,2 –
8. புதிய ஏற்பாட்டில் ஆதி கிறிஸ்தவர்கள் பாடும், போது இசை கருவிகள் பயன்படுத்தியதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அப்படியென்றால் புதிய ஏற்பாடு ஆதி கிறிஸ்தவர்கள் தேவனை மகிமைப்படுத்த எப்படி இசை அமைந்து பாடினார்கள்? (ரோம 15:6; எபி 13:15)
9. இன்று தேவனை மகிமைப்படுத்த நாம் பாடும் போது நம்முடைய இசையானது எங்கியிருந்து வர வேண்டும்? (எபே 5:19; கொலோ 3:16)
10. வாரத்தின் முதல் நாளில் சபை கூடிவருவதன் மூலமாய் நாம் தேவ செய்தியை கேட்டு நாம் என்ன செய்ய வேண்டும்? (1 தெச 2:13)
11. புதிய ஏற்பாட்டின் படி கர்த்தருடைய பந்தியும், காணிக்கையும் எப்பொழுது செய்யப்பட்டன? (அப் 20:7; 1 கொரி 16:1,2)
12. கர்த்தருடைய பந்தியில் வைக்கப்பட்டுள்ள இரண்டு பொருள்கள் என்ன? அதற்கான நோக்கம் என்ன? ( 1கொரி 10:16; 1 கொரி 11:23-28)
13. இயேசுவின் மாம்சத்திலும், இரத்தத்திலும் பங்கு பெறுகிறவர்களுக்கு இருக்கும் ஆசீர்வாதம் என்ன? (யோவா 6:54, 56)

14. நாம் தேவனுக்கு எப்படி கொடுக்க வேண்டும் என தேவன் எதிர் பார்க்கிறார்? ( 2 கொரி 9:7)

**III. தேவனைப் பிரியப்படுத்த நம்முடைய வாழ்க்கையானது மாற வேண்டும் (1 தெச 4:1)**

1. நம்முடைய மனம் எதை பகுத்தறியதக்க மறுரூபமாக வேண்டும்? (ரோம 12:2)

2. நம்முடைய சரீரங்களை எப்படி, யாருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்? (ரோம 12:1)

3. தேவனுடைய பிள்ளைகளுக்கு எவைகள் எல்லாம் தகாதவைகள்? (எபே 5:3,4)

4. நாம் யாரை/எதை களைந்துபோட வேண்டும்? (எபே 4:22)

5. கிறிஸ்து நமக்குள் இருப்பதால் நாம் செய்ய வேண்டிய முக்கியமான காரியங்கள் என்ன? (எபே 2:10; தீத் 2:14)

6. தேவனை பிரியப்படுத்த நமக்குள் இருக்க வேண்டிய குணங்கள் என்னென்ன? (கொலோ 3:12-15)

7. நமக்குள் வளர வேண்டிய ஆவியின் கனிகள் என்னென்ன? (கலா 5:22,23)

8. ஒரு கிறிஸ்தவர் இந்த பூமியில் வாழும் போது அவர் யாருக்காக இந்த பூமியில் காத்துக்கொண்டு இருக்க வேண்டும்? (1 தெச 1:10)
9. நாம் நம்முடைய இரட்சிப்பை இழந்து போக வாய்ப்பிருப்பதால், ,நாம் செய்ய வேண்டியது என்ன? (எபி 6:10-12; எபி 10:38,39)

10. வெளி 2:10 -யில் நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன?

11. நாம் தொடர்ந்து தேவனை அறிகிற அறிவில் வளர வேண்டும் (கொலோ 1:9,10); அதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன? ( 1பேது 2:3)

12. பெரயோ பட்டணத்தார் எதினால் நற்குணசாலிகளாய் மாறினார்கள்? (அப் 17:11)

13. எபிரெயர் 10:25,26-யிலிருந்து நமக்கு கிடைக்கும் எச்சரிப்பு என்ன?

**முடிவுரை:**

தேவன் மிகப் பெரியவர், அவருடைய வார்த்தை வல்லமை வாய்ந்தது. (எபி 4:12). நம்முடைய வாழ்க்கை சந்தோஷமானதாகவும், அர்த்தமுள்ளதாகவும் பிரயோஜனமுள்ளதாகவும் மாற்ற அவருடைய வார்த்தையினால் முடியும். தேவனுடைய வார்த்தைக்கு நாம் கீழ்படிவதன் மூலம் நம்முடைய வாழ்க்கை தரம் உயரும். நீங்கள் தேவனை பிரியப்படுத்த தாயராக இருக்கிறீர்களா?